Aud-5

648

தமிழ் நாடு பேரிடர் குறைப்பு முகமை,
09 FEB 2021
05 FEB 2021

**சுருக்கம்**

பேரிடர் மேலாண்மை – கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை வட்டம் கேத்துநாயக்கன்பட்டி கிராமம் – திருமதி. சசிகலா க/பெ. சரவணன் என்பவர் கடந்த 25.04.2020 அன்று மின்னல் தாக்கி காயமடைந்தது – ஒருவார காலத்திற்கு மேலாக அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றது – மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிவாரணத் தொகையாக ரூ.12,700/– நிதி ஒப்பளிப்பு செய்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் மற்றும் பேரிடர் மோலாண்மைத்துறை பேரிடர் மேலாண்மை அலகு, பே.மே. 2 பிரிவு**

**அரசாணை (நிலை) எண்..88** **நாள் 01.02.2021**

**சார்வரி, தை 19,**
**திருவள்ளுவர் ஆண்டு 2052**

N.C/D.M

**படிக்க:**

1. அரசாணை நிலை எண்.246, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நாள் 03.08.2017.
2. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித ந.க. எண்.12205/2020/பே.மே., நாள் 25.04.2020.
3. கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் கடித எண்.இ.இ.1(1)/3337/2020, நாள் 11.12.2020.

*******

**ஆணை:**

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர், கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், கேத்துநாயக்கன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திருமதி. சசிகலா க/பெ. சரவணன் என்பவர் 25.04.2020 அன்று மின்னல் தாக்கி காயம் ஏற்பட்டது தொடர்பாக கீழ்கண்டவாறு அறிக்கையை சமர்ப்பித்துள்ளார்:–

(i) கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், கேத்துநாயக்கன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திருமதி. சசிகலா க/பெ. சரவணன் என்பவர் கேத்துநாயக்கன்பட்டி கிராமத்தில் 25.04.2020 அன்று மாலை 6.00 மணியளவில் மின்னல் தாக்கியது.

(ii) இந்நேர்வில் திருமதி. சசிகலா க/பெ. சரவணன் என்பவருக்கு மார்பு பகுதியில் பாதிப்பு ஏற்பட்டு கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் 25.04.2020 முதல் 03.05.2020 வரையில், மேல் சிகிச்சை பெற்று பின்பு வீடு திரும்பியுள்ளதாகவும், அவர் ஒரு வார காலத்திற்கு மேல் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளதால் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தெரிவித்துள்ளவாறு திருமதி. சசிகலா க/பெ. சரவணன் என்பவருக்கு நிவாரணத் தொகையாக ரூ.12.700/– (ரூபாய் பன்னிரெண்டாயிரத்து எழுநூறு மட்டும்) வழங்க கோரியுள்ளார்.

2. கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரிடமிருந்து வரப்பெற்ற அறிக்கையினை பரிசீலனை செய்ததில், திருமதி. சசிகலா க/பெ. சரவணன் என்பவர் அரசு மருத்துவமனையில் 25.04.2020 முதல் 03.05.2020 வரை ஒருவாரம் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவச்சான்று மற்றும் மருத்துவச்சான்றில் மின்னல் தாக்கி காயங்கள் (Lightning Injury) அடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதால் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தெரிவித்துள்ளவாறு திருமதி. சசிகலா க/பெ. சரவணன் என்பவருக்கு நிவாரணத் தொகையாக ரூ.12,700/–(ரூபாய் பன்னிரெண்டாயிரத்து எழுநூறு மட்டும்) மாநில பேரிடர் மேலாண்மை நிவாரண நிதியில் இருந்து வழங்குமாறு, அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. மேற்காணும் கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கருத்துருவினை பரிசீலனை செய்த அரசு, மாநில செயற்குழுவின் ஒப்புதலுடன் அதனை ஏற்று, கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், கேத்துநாயக்கன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திருமதி. சசிகலா க/பெ. சரவணன் என்பவர் 25.04.2020 அன்று மின்னல் தாக்கி காயமடைந்து ஒருவார காலத்திற்கு மேலாக அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதால், மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிவாரணத் தொகையாக ரூ.12,700/–(ரூபாய் பன்னிரெண்டாயிரத்து எழுநூறு மட்டும்) வழங்கிட நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

**"2245 இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு – 02 வெள்ளம் , புயல் முதலியவை–111 துயருற்ற குடும்பங்களுக்குக் கருணைத் தொகை – மாநிலச் செலவினங்கள் – வெள்ளப் பாதிப்புப் பகுதிகளில் துயருற்ற குடும்பங்களுக்குக் கருணை உதவித் தொகை வழங்கல் –351 இழப்பீடு –02 ஏனைய இழப்பீடுகள் அனுமதித்தது."**

**[IFHRMS DPC:- 2245 02 111 AA 35102]**

**(Old DPC:- 2245 02 111 AA 5128)**

5. மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை ரூ.12,700/– க்கான செலவினம் 2020–2021 ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய செலவினத்தை எதிர்நோக்கி, மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை பெற்று வழங்க கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையருக்கு அதிகாரமளிக்கப்படுகிறது. மேலும், பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2020–2021–ஆம் ஆண்டிற்கான இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது கருத்துருவை உரிய நேரத்தில் நிதி (வருவாய்) துறைக்கு அனுப்புமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதி (வருவாய்) துறையின் அ.சா.எண்.1095/வருவாய்/2021, நாள் 27.01.2021–ல் பெறப்பட்ட இசைவுடனும், கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண். 1537(one thousand five hundred and thirty seven)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**அதுல்ய மிஸ்ரா**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**பெறுநர்**

கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை–600009.
ஆணையர் (பேரிடர் மேலாண்மை), தமிழ்நாடு பேரிடர் அபாய தணிப்பு முகமை, சேப்பாக்கம், சென்னை–600005.
மாவட்ட ஆட்சியர், கிருஷ்ணகிரி.
மாவட்ட கருவூல அலுவலர், கிருஷ்ணகிரி.
முதன்மை கணக்காயர், சென்னை–600018/600 035.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–600 008.

**நகல்**

கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600009.
கூடுதல் தலைமைச் செயலாளர், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600009.
முதன்மைச் செயலாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600009.
முதன்மைச் செயலாளர், பொதுப்பணித் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600009.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், தலைமைச் செயலகம், சென்னை–600009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அவர்களின் முதன்மை தனிச் செயலாளர், தலைமைச் செயலகம், சென்னை–600009.
நிதி (வருவாய் / வ.செ–1 / வ.செ.–2/ வ.வ.–1) துறை, தலைமைச் செயலகம், சென்னை–600009.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (அநமு–II) துறை, தலைமைச் செயலகம், சென்னை–600009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**அரசு சார்புச் செயலாளர்**